**செ.வெ.எண்: 09** **நாள்: 03.09.2016**

**<u>பத்திரிகைச்செய்தி</u>**

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் செயல்படுத்தப்படும் திட்டங்கள் அனைத்து தரப்பு மக்களையும் சென்றடையும் வகையில் செய்தித்துறையின் சார்பில் முகநூல் பக்கம் தொடங்கப்பட்டுள்ளது – மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

**இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களது அறிவுப்புகள் மற்றும் அரசின் அனைத்துத்துறைகளிலும் செயல்படுத்தப்பட்டுவரும் திட்டங்கள், சாதனைகள் மற்றும் வளர்ச்சிப்பணிகள் ஆகியவற்றை மக்களிடையே எடுத்துச்செல்லும் பணியினைச் செய்தி மக்கள் தொடர்புத்துறை செய்து வருகிறது.

இத்துறையின் மூலம் அரசின் செய்தி வெளியீடுகள், புகைப்படங்கள் மற்றும் வீடியோப் பதிவுகள் ஆகியன மின்னஞ்சல் மூலமாக நாளிதழகள், தொலைகாட்சிகள், செய்திமுகமைகள், காலமுறை இதழ்கள் மற்றும் இணையதள செய்தி நிறுவனங்கள் போன்ற அனைத்து ஊடகங்களுக்கும் அனுப்பப்பட்டு, அவற்றை செய்திதாள்கள் மற்றும் ஊடகங்களில் வெளியிடப்பட்டு, பொதுமக்கள் அவற்றைத்தெரிந்துகொள்வதற்கு இத்துறை உறுதுணையாக இருந்து வருகின்றது. செய்தி மக்கள் தொடர்புத்துறையின் இணையதளமான www.tndipr.gov.in மற்றும் அரசு இணையதளமான www.tn.gov.in ஆகிய இணையதளங்கள் வாயிலாகவும் அரசின் செய்திகள் மக்களைச் சென்றடைய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக, சமூக வலைதளங்களின் முன்னேற்றம் மற்றும் அவற்றின் வளர்ச்சியின் காரணமாக, அரசின் அனைத்து செயல்பாடுகள் மற்றும் நிகழ்வுகளை நொடிப்பொழுதில் பொதுமக்களை சென்றடையும் வகையில் அனைத்து தரப்பு மக்களும் பெரிதும் பயன்படுத்திவரும் முகநூல் (FACE BOOK) வாயிலாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களது அறிவிப்புகள் மற்றும் அரசின் திட்டங்கள் ஆகியவற்றை உடனுக்குடன் பதிவிட்டு வெளியிட இத்துறை நடவடிக்கை எடுத்துள்ளது. முகநூலில் இத்துறையின் சார்பாக "TN DIPR" என்ற முகநூல் பக்கம் உருவாக்கப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களது அறிவிப்புகள் மற்றும் அரசின் அனைத்து துறைகளிலும் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள், சாதனைகள் மற்றும் வளர்ச்சி பணிகள் ஆகியவற்றை மக்களிடையே எடுத்துச்செல்லும் பணியினை செய்தி மக்கள் தொடர்புத்துறை செய்து வருகின்றது. எனவே பொதுமக்கள் மற்றும் இளைஞர்கள் பெருமளவில் இச்சேவையை பயன்படுத்தி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கும் திட்ங்கள் மற்றும் செயல்பாடுகள் குறித்து தெரிந்துகொண்டு, அத்திட்டங்கள் மூலமாக தங்கள் வாழ்க்கை தரத்தினை மேம்படுத்திக்கொள்ளலாம்.

**மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**